**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண்.1045/2022**
**வழக்கு சாட்சி. 5**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **பாக்கியராஜ்** |
| **தந்தை பெயர்** | **:** | **அந்தோணி சாமி** |
| **கிராமம்** | **:** | **பாலகிருஷ்ணாபுரம்** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **ஹோட்டல்** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **42** |

**13.03. 2023**
**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பாலகிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து காமராஜர் சிலை அருகே உள்ள செல்வம் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். 03.07.2022ம் தேதி பகல் 12.30 மணி அளவில் நான் செல்வம் ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்த போது நகர் வடக்கு போலிசார் வந்து முதல்நாள் போலிசார் வந்து இருநபர்கள் மது அருந்திவிட்டு சண்டை செய்து கொண்டது சம்மந்தமாக கத்தியை கைப்பற்றி அதற்கு சாட்சியாக இருக்கும் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **(அத்தாட்சி அ.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை .**

இவ்வழக்கின் எதிரிகள் பெயர், முகவரி பற்றிய விவரங்கள் எனக்கு போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியை எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. என்னிடம் கடையில் வைத்துதான் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கத்தியின் அளவு எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலிசார் கத்தியை காட்டினார்கள். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலிசார் கேட்டதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.03.18 11:53:02 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,
வழக்கு எண்.1045/2022
வழக்கு சாட்சி.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுந்தர் |
| தந்தை பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி |
| தாலுக்கா | : | திண்டுக்கல் |
| ஜாதி | : | |
| தொழில் | : | பூவியாபாரம் |
| சமயம் | : | |
| வயது | : | 30 |

**13.03. 2023**

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மேட்டுப்பட்டியில் குடியிருந்து பூ மார்க்கெட்டில் பூ வியாபாரம் செய்து வருகிறேன். 03.07.2022 ம் தேதி அதிகாலை நான் பூ மார்க்கெட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் போது போலிசார் வந்து என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அந்த இடத்தில் போலிசார் விசாரணை செய்து படம் வரைந்தார்கள். அதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **( பார்வைமகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை .**

நான் கையொப்பம் செய்த தாளில் போலிசார் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதற்காக நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.03.18 11:53:09 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண்.1045/2022**
**வழக்கு சாட்சி.7**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **நடராஜன்** |
| **தந்தை பெயர்** | **:** | **கோவிந்தன்** |
| **கிராமம்** | **:** | **மேட்டுப்பட்டி** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **பூமார்க்கெட்** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **49** |

**13.03. 2023**
**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மேட்டுப்பட்டியில் குடியிருந்து பூ மார்க்கெட்டில் பூ கட்டும் வேலை செய்து வருகிறேன்.03.07.2022 ம் தேதி டாஸ்மார்க் கடை அருகே உள்ள காந்திசிலை அருகேதிண்டுக்கல் வடக்கு காவல்நிலைய போலிசார் போலிசார் படம் வரைந்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வைமகஜரிலுள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை .**

மாதிரி வரைபடத்தில் போலிசார் என்ன படம் வரைந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பார்வைமகஜரில் போலிசார் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.03.18 11:53:18 +0530

Judicial Magistrate No.II
Dindigul.